2013 ஏப்ரல் 10]

மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு செய்த பின்னர், அந்த இடம் சரியான இடம் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கே கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

205—

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை

***7213—திரு. ரா. சரத்குமார்**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தென்காசி பகுதியில் தோட்டக்கலைப் பயிர்களான வாழைப்பழம், மாம்பழம், நெல்லிக்காய், வெங்காயம், தக்காளி, கத்திரிக்காய், முந்திரி, மிளகாய் மற்றும் கேந்திப்பூ முதலியவை விளைவிக்கப்படுகின்றன. உள்ளூர் நுகர்வுபோக மீதம் இருப்பதை பதப்படுத்தி, மதிப்புக் கூட்டி, அவற்றை விற்பனை செய்வதற்கான திட்டப் பணிகள் குறித்து ஆய்வினை மேற்கொண்டு, அதுகுறித்த முதலீடு மற்றும் சாத்தியக்கூறு அறிக்கையுடன், தகுந்த தொழில்முனைவோர்கள் நாடினால், TIDCO மூலம் தொழிற்சாலை நிறுவ, மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலித்து, கூட்டு முயற்சியில் செயல்படுத்த முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள், இருக்கையில் இல்லை.*